# போரின் பின்னரான ஈழத்துத் தமிழ் நாவல்கள் : குணா கவியழகனின் ‘விடமேறிய கனவு’ என்ற நாவலை முன்வைத்து ஓர் ஆய்வு

த.அஜந்தகுமார் கெ.யு (Hons) M.Phil in Tamil, வதனரேகா அஜந்தகுமார்

ஆசிரியர்,யா/ஆழியவளை சி.சி.த.க வித்தியலாயம்

ஆசிரியர். யா/ செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை

tajanthakumar@gmail.com, **tajanthakumar@gmail.com**

**அறிமுகம்**

ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றிற்கு புதிய அனுபவங்களைப் போர்க்காலம் வழங்கியிருந்தது. போர் முடிவுக்கு வந்து ஒரு தசாப்தம் ஆன போதிலும் போர் தந்த மீதவுள்ள வாழ்வினைக் கடத்தல் சாத்தியமானதன்று. ஓவாது கூவுகின்ற மனத்தினை ஆற்றுப்படுத்தவும் வாழ்வின் உன்னதமான தருணங்களை மீள மீள நினைந்து மகிழ்கின்றதனையும் உதிரம் கொட்டிய காலங்களையும் உள்ளூரப் புழுங்கிப் புழுங்கி அழுததனையும், அதுவரை காலமும் எண்ணி யிருந்த, கண்டிருந்த கனவு வாழ்க்கையில் விடமேறியதனையும் விடமேறியதால் எதிர்காலம் நீலம் பாய்ச்சிய இருளாய் விரிந்ததனையும் இலக்கிய வடிவமொன்றின் மூலமே வெளிப்படுத்த முடியும். போரின் பின்னரான அனுபவங்களைப் பேசும் நாவல்களுள் குணா கவியழகனின் ‘விடமேறிய கனவு’ என்ற நாவல் குறிப்பிடத்தக்கது. இதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

பிரதான சொற்கள்: ஈழத்துத் தமிழ் நாவல், உதிரம்,˙. போர்

## விடமேறிய கனவு

தமிழ்த் தேசிய வரலாற்றில் போராளியாக இணைந்து செயற்பாட்டாளராக இருந்தவர் குணா கவியழகன். மலரவன், தூயவன், மலைமகள், தமிழ்க்கவி, யோ.கர்ணன் போன்ற போராளிகளாய் இருந்த படைப்பாளிகள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர். நஞ்சுண்ட காடு, கர்ப்ப நிலம், போருழல் காதை, அப்பால் ஒரு நிலம் என்ற நாவல்களை எழுதியவர். குணா கவியழகனின் இரண்டாவது நாவல் விடமேறிய கனவாகும். நாவலாசிரியர் தன் முன்னுரையில்

“ஆழ்மனம் அபாயச் சங்கெடுத்து ஊதி என்னுள் அலறிய பொழுது நான் பொறுக்கவொண்ணாது போரின்பாடுகளை பொங்கி வந்த கண்ணீரில் தாள்கள் தோய எழுதினேன்.”[1]

என குறிப்பிடுகின்றார். மரணம் நிச்சயிக்கப்பட்டிருப்பது யதார்த்தம் என்றாலும் அதனை மிக அருகாமையில் தினந்தோறும் அனுபவிப்பது என்பது இயலாத காரியம். மரணத்தை கண்முன்னே கண்டு, அதனை அனுபவித்தவனது வாழ்க்கையே இந்நாவலின் உயிரோட்டமாக அமைகின்றது. முள்ளிவாய்க்காலில் தமிழினமானது உலக வரலாற்றில் குறிக்கத்தக்க பேரழிவைச் சந்தித்தது. எஞ்சியவர்களிடம் எஞ்சிய வாழ்வை பற்றிய எண்ணத்தை சுமக்கமுடியாமல் தவித்ததையே எழுதியுள்ளார்.

“ நிசிகளில் கொதிக்கும் இரத்தம், தாள்களில் வழிந்து கதையாகிப்போனது.”2

இதுவரை வாழ்ந்த வாழ்வு தந்த கர்வம், வலி, வேதனை, கழிவிரக்கம் என்பவற்றையும் வாழ்ந்த வரலாற்றையும் கூறி நிற்கின்றது இந்நாவல்,

“ வாழ்வறிந்ததெல்லாம் வலிகளைத்தான். கதைகள் கண்டெடுத்த சொற்களோடு வந்தேனா உங்களிடம்”3

என்று தொடங்கும் நாவல் விடுதலைப் போராட்ட வரலாற்றில் விடுதலை இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய போராளிகளையும் பொறுப்பதிகாரிகளையும் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் புனர்வாழ்வு முகாம் என்ற பெயரில் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளையும் அவலங்களையும் பற்றிப் பேசுகின்றது. போர்வாழ்வு அவர்களுக்கான எல்லாத் தத்துவ விசாரங்களுக்குமான விடையினை அளித்திருந்தது. குடும்பம் என்ற அமைப்பு போரினால் வேரோடு அழிந்து போனமையும், உள்ளவர்களுக்கு இல்லாதவர்களைப் பற்றி நினைத்து ஏங்கும் வாழ்வையும் அகப்பட்டவர்களை ஆதரவாக நடத்தாது வதை செய்தகொடுமையையும் இறுதியில் கொடுமையிலிருந்து கதை சொல்லியும் அவனது கூட்டாளிகளும் தப்பித்துச் செல்வதையும்இந்நாவல் பேசுகின்றது.

**நாவலின் திசைகள்**

போர், போர் நிறைவுற்றதும் நடத்தப்பட்ட விசாரணை, விசாரணையின் பின்னரான தடுப்பு முகாம், சித்திரவதை, விசாரணைப் பொறிமுறை, வழங்கப்பட்ட உணவு, குடிநீர், நடத்தப்பட்ட விதம், ஏக்கம், இயலாமைகளின் போதும் அவர்களிடையே இருந்த எள்ளல் என்ற பின்னல்களினூடாக துன்பச் சுவை மிகுந்த உணர்ச்சியின் இழுப்பை நிகழ்த்தியபடி நகர்கின்றது நாவல். எழுதிய கதை சொல்லியை மட்டுமன்றி வாசகனையும் கண்ணீரோடு ஏங்கும் அனுபவ மனநிலையோடு பிணைப்பதாக இது அமைந்துள்ளது.

**புனர்வாழ்வு முகாம் சித்திரவதைகள்**

புனர்வாழ்வு முகாம், மக்கள் நலன்புரி முகாம், மறுவாழ்வு முகாம் எனப் பலபெயர்கள் முகாம்களுக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் சொல்லில் மட்டுமே அவை இருந்ததனையும் பெயரிடப்படாத வெளியுலகத்திற்குத் தெரியாத இரகசிய வதைமுகாம்கள் இருந்ததனையும் அறியமுடிகின்றது.

“யேசுநாதரைச் சிலுவையில் அறைந்தது போல் என் கைகளை விரித்து முழங்கையுடன் மேற்புறமாகக் கையை மடித்து சிமெந்து நிலத்துடன் விலங்கு போட்டிருக்கின்றார்கள். ஏன் இப்படி நின்றபடி கையை சரணடையத் தூக்குவது போல படுக்க வைத்து விலங்கு போட்டிருக்கிறார்கள்?”4

“ இங்கு காலை எனப்படுவது தரையோடு எங்கள் உடலைப் பிணைத்திருந்த கை, கால்களுக்கு உண்டான சங்கிலியை கழற்றி விடுவதாகும். மாலை எனப்படுவது மீண்டும் தரையோடு மல்லாக்க எம்முடலைப் பிணைத்து விடுவதாகும்.”5

“ அந்த அறையில் பிணங்களை அடுக்கி விட்டது போல கைதிகள் படுத்திருந்தனர். ஒரு கால் வைக்கக்கூட இடமில்லாதவாறு உடல்கள் அடுக்கப்பட்டு இருந்தன.”6

ஈழப்போரின் இறுதி நாட்களில் ஐ.நா.சபையும் செஞ்சிலுவைச்சங்கமும் நின்றுகொண்டிருந்ததனால் தமக்கு இனிப்பயமில்லை என போராளிகள் நினைத்த போதும் அவர்கள் நாய்களை விடக் கேவலமாக நடத்தப்பட்டதை நாவல் பதிவு செய்கின்றது.

“தலைமாட்டில் கைகழுவும், சாப்பாடு கொட்டும் வாளி கெட்ட மணத்தை என் நாசியில் ஏற்றியது. நீட்டிப்படுக்க முடியாததால் நான் படுத்தபடி கால்களைச் சப்பணம் கொட்டும் சாக்கில் மடித்துக் கொண்டேன். …..முதுகில் எலும்பையும் தலையின் பிடரிப்பகுதியையும் கற்கள் குத்தின.”7

“இங்கு சாப்பாடு எனப்படுவது களஞ்சியத்திற்கு வரும் சிங்கள நாட்டு இலைகுழைகளையும் கிழங்கையும் உப்பும் தண்ணீரும் போட்டு அவிப்பதுதான். வேறு எதுவும் அனேகமாகப் போடுவதற்கு இல்லை. பச்சைக் கோதுப்பருப்பும் நித்தம் அவித்து வைப்பார்கள். …..இதைச் சாப்பிட ஒரு வயிற்றோட்டம் வரும். பல குழந்தைகளும் வயோதிபர்களும் இறந்தது இந்தப் பருப்பால் தான். தவிர்க்கவும் முடியாது. சாப்பிட வேறு எதுவும் இல்லை.”8

மனிதன் வாழ்வதற்கு மிக அத்தியவசியமானது உணவும் நீருமே. தோற்றுப் போனவர்களிடம் உணவையும் நீரையும் வஞ்சிப்பதனூடாகவும் இன்னும் இன்னும் குரூர வெற்றியை அவர்கள் உள்ளூர அனுபவித்தார்கள்.

“ஒருவாளி தண்ணீர் கிடைக்க அறுநூறு பேரின் முறை கடந்து திரும்பி வரப் பத்து நாட்களுக்கு மேல் ஆகும். ஐம்பது பேர் கொண்ட அறையில் அவிச்சல், வெக்கையில் உடல்கள் சாகும் முன்னே நாறின. இனி இருபது லீட்டர் தண்ணீரில் ஒரு முழுக்குப் போடுவது சுலபமான காரியமல்ல. தேத்தண்ணி கோப்பையால் முழுகுவதற்கு விசேடப்பயிற்சி வேண்டும்…”9

மலம் நிறைந்த கழிவறைக்குள் மலம் கழிப்பவனது நிலை, காற்றே புகமுடியாத, ஐந்து பேர் படுக்கக்கூடிய அறையில் ஐம்பது பேர் படுத்தல், அழுகிய பிணத்தின் நாற்றம் போல வாழும் நடைப்பிணங்களான தங்கள் மீதெழும் துர்மணம் என சகிக்க முடியா சகித்தலோடு, கொடுஞ் சித்திரவதைகளோடு வாழநிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

### 1.4.1 போராட்டத்தின் மீதான மதிப்புணர்வும் மாற்றுக்கருத்தும்

இந்நாவல் போராட்டத்தில் ஈடுபட்ட அல்லது பொறுப்புமிக்க பதவி வகித்த ஒருவனால் படைக்கப்பட்டிருந்தாலும் அறஉணர்வின் வழி இலக்கியப் படைப்பாக்கம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

“அவனுக்கு என்னைத் தெரிந்திருக்கிறது. இந்த நேசிப்பும் மரியாதையும் கூட்டு வாழ்வும் தான் கட்டறுத்து வரமுடியாமல் என்னைப் பண்ணியதா? போர் முடியப் போவதை நான் முன்னுணர்ந்திருந்தேனே”10

போராளியாய் இருந்த போதிலும் போராளி இயக்கம் மேற்கொண்ட முறையற்றநடவடிக்கைகளையும் பதிவு செய்யத் தவறவில்லை. கட்டாய ஆட்சேர்ப்பு ஏற்படுத்திய கொந்தளிப்புகளையும் அவற்றிற்கான நியாயப்பாடுகளையும் முன்வைத்துள்ளார்.

“ அண்ணை இயக்கம் ஏன் கடைசி நேரத்தில் எல்லாரையும் கட்டாயப்படைக்குப் பிடிச்சது?” .. அதால களத்தில தோல்விக்கு வழி பிறந்ததே தவிர, வெற்றிக்கு வழி பிறக்கேல்ல. வந்த வெள்ளம் நிண்ட வெள்ளத்தை அடிச்சுக் கொண்டு போன கதையாப் போச்சு”11

“பயந்து வீட்டுக்க ஒளிச்ச பெடியளையும், பொம்பிளப்பிள்ளைகளையும் போர்ப்பயிற்சி இல்லாமல், உடற்பயிற்சியுமில்லாமல், மனப்பயிற்சியுமில்லாமல் நெருப்புக் குழம்பாய் கொதிக்கிற யுத்தக் களத்தில கொண்டு வந்து விட்டால் என்ன நடக்கும்? ஆமி வந்தால் இதுகள் நிக்காதுகள்....உப்பிடியே மன்னாரில இருந்து முள்ளிவாய்க்கால் வரைக்கும் நிலத்தையும் இழந்து அதுகளையும் பலிகொடுத்து, கடைசியாக அழிஞ்சதுதான் மிச்சம்?”12

தன் இனத்தின் விடுதலைக்காய் சென்ற போராளியின் குடும்ப உறுப்பினர்களையே கட்டாய ஆட்சேர்ப்பு என்ற பெயரில் பிடித்து யுத்தகளத்தின் முன்னே நிறுத்தி தேவையற்ற பலி எண்ணிக்கையை அதிகரித்ததோடு இராணுவம் இலகுவாக முன்னேறவும் வழிவகுத்து விட்டிருந்தனர் என்ற விமர்சனத்தை உரையாடல் பாங்கில் அமைத்துள்ளார்.

“ இரண்டு மாசம் முன்னம்தான் அண்ணன் சுதந்திரபுரத்திலவச்சு செல்விழுந்து செத்தவன். அதுவரைக்கும் அவன்தான் அம்மா,அப்பா, தங்கச்சிய கூட்டிக்கொண்டு ஒவ்வொரு இடமா இடம்பெயர்ந்து வந்தவன். ..சாப்பாடு தேடுறது எண்டாலும் சரி இடம்பெயரக் கொட்டில் போடுறது எண்டாலும் சரி பங்கர் வெட்டுறது எண்டாலும் சரி தங்கச்சிதான் பாக்கவேணும். பிள்ளை இந்த அலுவலுக்கு வெளிக்கிட்டுத் திரிய இயக்கம் பிடிச்சிட்டுது. நீங்க சொல்லுங்க வீட்டப் பாதுகாக்கத்தானே நாட்டுக்குப் போராளியானம்?”13

போரில் தோற்றுப்போவோம் என்ற முடிவு தெரிந்ததன் பின்னரும் களத்திலே நின்றிருந்தார்கள். போரைத் தொடங்கு முன் தமது பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து தொடங்கியிருக்க வேண்டும் என்ற மாற்றுக் கருத்தையும் முன்வைத்துள்ளார்.

“சரி எதிர்க்கிறது என்று முடிவு செஞ்சா இயக்கம் அதுக்குத் தன்னத் தகுதிப்படுத்திக் கொண்டிருக்க வேணும், அடிப்பம்,பிடிப்பம் எண்டால் வேலைக்காகுமோ?”…இப்படிக் கற்பனையில கணக்குப் போடலாம். கணக்கு களத்தில சண்டை பிடிக்காது. களத்தில கையில இருக்கிற துவக்காலதான் சண்டை பிடிக்கோணும்.”14

போரின் இறுதி நாட்களில் கட்டாய ஆட்சேர்ப்பு மக்களிடமும் போராளிகளிடமும் தாக்கத்தை ஏற்படுத்தியதையும் கட்டாயச் சேர்ப்பினால் பலி எண்ணிக்கை அதிகரித்தும் போராளிகளினது உறவுகளையும் பிடித்ததனால் அவர்களும் களத்திலே நிதானத்துடன் போரிடமுடியாத அவலத்தையும் புலப்படுத்தியுள்ளார்.

**1.0 நாவலின் எடுத்துரைப்பு முறை.**

ஈழப்போரின் இறுதி நாட்களின் பின்னர் போராளிகளின் புனர்வாழ்வு முகாம் வாழ்வின் உள்முக அனுபவங்களை அதே கொதிநிலையுடன் வெளிப்படுத்தியுள்ள இந்நாவலானது மிக எளிமையாக யாரையும் ஈர்த்துவிடக்கூடிய மொழியில் ஆக்கப்பட்டிருக்கின்றது. ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்ற சங்கக்கவிஞனின் தத்துவிசாரத்தில் இருந்து தொடங்கும் இந்நாவல் மரணம், விடுதலை குறித்த தத்துவ அனுபவங்களைப் புதிய மொழியில் பேசுகின்றது. பாத்திர வார்ப்பில் இவர் காட்டியிருக்கும் அக்கறை முக்கியமானது.உண்மைகளையும் அனுபவத்தையும் கலையாக்குவதும் புனைவாக்குவதும் சாதாரண விடயமல்ல.பிரசாரம் ஆகாமலும் தன்னிலை விளக்கமாகவும் இல்லாமல் அது வாசகனை ஒரு புனைவு வெளிக்குள் அழைத்துச் சென்று பிற அனுபவமாக மாற்ற வேண்டும். நாவலாசிரியர் அழவும் , சிரிக்கவும் தன்னிலை மறக்கச் செய்யவும் வைத்துள்ளார் என்பது முக்கியமானது.

“ஓர் இலக்கியப்படைப்பாளனின் நடை ஒரு மனிதனுடைய மேலுடை போன்றது அன்று அது உடலோடு உடலாக ஒட்டிக் கொண்டுள்ள தோல் போன்றது” 15

என ஞானசம்பந்தன் குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் தனித்தன்மை இருக்கிறது. அவரவரது அறிவுத்திறனுக்கும் அனுபவத்திற்கும் கலையுணர்விற்கும் ஏற்ப உத்தி மாறுகின்றது. எளிமையான சரளமான மொழிநடையிலும் யாரையும் ஈர்த்து விடக்கூடியதுமான மொழியில் அமைந்துள்ளது.தத்துவ விசாரங்களினூடாகவும் சுய எள்ளல் கொள்வதன் மூலமும் நாவல் பயணிக்கின்றது.

“உடையார் கட்டு றோட்டில் மாடுகளும் மனிதர்களும் செத்துச் சிதறியிருந்த பிணங்கள் போலஅறையில் கைதிகள் முறுகிப்படுத்திருந்தார்கள.” 16

கதா பாத்திரங்களின் உரையாடல்களைத் தேவைக்கேற்பக் கையாண்டுள்ளார். பேச்சு வழக்கு மொழியிலும் பாத்திரங்களின் நிலைக்கேற்ப சிங்கள, சிங்களத்தமிழ் மொழியையும் கையாண்டுள்ளார்.

''பயம் வேணாங். எல்லாம் முடிஞ்சி. கதியா வீட்ட போகலாம் இங்க நம்ம ஆக்கள் அடிக்கும் தானே. நீங்க பெரிய சேர்கிட்ட போய் சொல்றது.சரியா?பயம் வேணாங்... நான் யாப்பா பட்ணாவில ரண்டி வரிசம் நிண்ணது.நல்லா தமிழ் பேசிம் முடியும்'' **17**

வாழ்க்கை பற்றிய பயம், எடுத்து வைக்க வேண்டிய ஒவ்வொரு அடியினதும் நிதானம், திட்டம் வகுக்கும் பொறிமுறை தொடர் கேள்விகள், கேள்விகளால் நிலை குலைதல் என கதை நகர்த்தலின் ஒவ்வொரு இடங்களிலும் வாசகனைப் பீதி கொள்ளச் செய்தல் என்பவற்றை கச்சிதமாகவே இலக்கியமொழியில் வெளிப்படுத்தியுள்ளார்.

''வன்னிக்குப் போனனி, எப்படி உன்னைக்கட்டாய ஆட்சேர்ப்பில இயக்கம் விட்டுவச்சிது'. 'நான் பிடிபடாமல் ஒளிச்சிருந்தேன். 'அவன் இந்த ஒளிச்சிருந்த கதையை நம்பவில்லை..ஆமிக்காரனுக்கு வலுவான சந்தேகம் வந்தது...**18**

அனுபவங்களின் பாதிப்புக்கள். மொழியின் செறிவு, கட்டமைப்பு என்பனவே படைப்பாளிகளிடையே வேறுபாட்டிற்கும் தனித்துவத்திற்கும் காரணமாக அமைகின்றது.பாத்திரங்களில் இவர் கையாண்டிருக்கும் கனதி முக்கியமானது. சஞ்சயன், கலை, சுரேன், பசீலண்ணை, ராசு அண்ணர், ஜான், ரஹீம், றுவான் என பல்லின மக்களும் உலா வருகின்ற அதே நேரத்தில் பலமும் பலவீனமுமுள்ள பக்கங்களையும் கலையாக்கியுள்ளார்.

ராசு அண்ணர் என்ற பாத்திரத்தின் மூலம் தமிழினத்தின் அழிவுமட்டுமன்றி உலக வரலாற்றில் எங்கெல்லாம் ஒடுக்கப்பட்ட இனம், வஞ்சிக்கப்பட்ட இனம் இருக்கின்றதோ? அவற்றிற்கெல்லாம் சமர்ப்பணம் செய்வதாய் தத்துவப்பாடல் இடம்பெறுகின்றது.

'' தர்மம் ஒரு வாழ்வின் பொய்யோ

சூதே அதன் உள்ளின் மெய்யோ..**19**

**முடிவுரை**

படைப்பிலக்கியவாதிகள் ஒவ்வொருவரும் படைப்பாக்கம் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டவர்களாகத் திகழ்ந்த போதிலும் அவர்களது தனித்துவமே அவர்களை வாசகர்கள் மத்தியில் நிலைபெறச் செய்கின்றது. இந்நாவல் அவலம் நிறைந்த வரலாற்றை ஆவணமாக்குகின்றது. போராளி என்ற போதிலும் படைப்பிலக்கியவாதி என்ற அடிப்படையில் படைப்பின் பொதுத்தன்மை சிதைவடையாது தனதும் தன்னினத்தினதும் அழிவை கலையாக்கிய குணா கவியழகனின் இந்நாவல் உலக வரலாற்றில் சிதைந்து அழிந்து போன இனத்தின் சாட்சியாய் நிற்கின்றது.

அடிக்குறிப்புகள்

1. குணா கவியழகன்., 2015 விடமேறியகனவு, அகல் வெளியீடு, சென்னை. ப.5

2. மேலது ப.5
3. மேலது ப.7
4. மேலது ப.9
5. மேலது ப.30
6. மேலது ப.110
7. மேலது ப.112
8. மேலது ப.121
9. மேலது ப.120
10. மேலது ப.26
11. மேலது ப.82
12. மேலது ப.83
13. மேலது ப.83
14. மேலது பக்.85 - 86
15. ஞானசம்பந்தன்,அ.ச., 1999 இலக்கியக்கலை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. ப.40
16. மேலது ப.207
17. மேலது ப.82
18. மேலது ப.89
19. மேலது பக்.106 -107

உசாத்துணை நூல்கள்


1. குணா கவியழகன்., 2015 விடமேறியகனவு, அகல் வெளியீடு, சென்னை
2. ஞானசம்பந்தன்,அ.ச., 1999 இலக்கியக்கலை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.